# தமிழர் பொருளியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 67

28.04.2024


# நெல் விவசாயத்தில் வீசி விதைக்கும் பழைய தொழில்நுட்பத்தில் இருந்து இயந்திர நாற்று நடவுக்கு மாற வேண்டியதன் அவசியம்





இருப்பை தக்க வைக்குமா யாழ்ப்பாணம்?

08



வாழ்வியலை நாசமாக்கும் புலம்பெயர் மோகம் பகட்டிற்கு பலியாகும் ஒரு தலைமுறை

14



அருமையான வருமானம் தரும் ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம்

16

# நெல் விவசாயத்தில் வீசி விதைக்கும் பழைய தொழில்நுட்பத்தில் இருந்து இயந்திர நாற்று நடவுக்கு மாற வேண்டியதன் அவசியம்

நெல் பயிர் செய்கையில் புழுதி விதைப்பு சேற்று விதைப்பு கையால் நடவு போன்ற தொழில்நுட்பங்கள் காலாதி காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றன. தற்பொழுது புதிய தொழில்நுட்பங்களாக பறசூட் முறை மற்றும் இயந்திர நெல் நாற்று நடவு என்பன உலக நாடுகளால் வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகின்றன.

பண்டைய காலங்களிலேயே, புழுதி விதைப்பு மற்றும் சேற்று விதைப்பை விட கையால் நாற்று நடும் பொழுது குறைந்த நோய், பீடை தாக்கங்களுடன் அதிக விளைச்சல் கிடைக்கப்பெற்றது. ஆனால் பிற்பட்ட காலங்களில் பண்ணை வேலைகளுக்கான ஆள் பற்றாக்குறை மேற்படி கையால் நாற்று நடுகையை மட்டுப்படுத்தியது.

இவ்வாறான பின்புலத்தில் சீனா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் மிகவும் வெற்றிகரமாக குறைந்த செலவுடன் வேகமாகவும் வினை திறனாகவும் நடவில் ஈடுபட்டது. மேற்படி இயந்திரங்கள் இலங்கைக்கு ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னரே விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுதிலும் விவசாயிகளின் பிற்போக்கு மற்றும் அரச இயந்திரத்தின் குறைபாடுகள் காரணமாக பிரபல்யமாகாது இருந்தது.



**இயந்திரநெல் நடவு பிரபல்யம் ஆகாமல் இருந்ததற்கான காரணங்கள்**

1. விவசாயிகளுக்கான தொழில்நுட்ப அறிவு குறைவு.
2. விவசாயிகளுக்கு விதைப்பு நேரத்தில் போதுமான நேரம் இன்மை.
3. கடினமானது என்ற மனநிலை
4. பயம் மற்றும் நம்பிக்கையற்ற தன்மை
5. போதுமான அளவு இயந்திர பற்றாக்குறை.
6. விவசாய விரிவாக்க சேவைகள் போதுமான அளவு அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்காமை

**நெல் நாற்று நடுவதால் ஏற்படும் நன்மைகள்**

20 - 30% விளைச்சல் அதிகரிக்கும்.

25 - 35% உற்பத்தி செலவை குறைக்க முடியும்.

50 - 85% இரசாயன பாவனையை குறைக்க முடியும்.

ஏக்கருக்கு 20 -25% நீர் பயன்பாட்டு வினைத்திறன் அதிகரிக்கும்.

மண்வளம் அதிகரிக்கும்.

பண்டி நெல்லை (Weedy Rice) கட்டுபடுத்துவதற்கான ஒரே தீர்வு. (Package)

குறைந்த விதைத்தேவை. (16- 20 kg/acre)

விதைநெல் உற்பத்திக்கான சிறந்த தெரிவு.

இது ஒரு காலநிலைக்கு அமைவான விவசாய செயற்பாடு.

இந்தப் பின்னணியில் யாழ் பல்கலைக்கழக விவசாய பீட பட்டதாரிகள், தொழில்நுட்ப பீட மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழக கல்லூரி (UniVoTec) பண்ணை இயந்திரவியல் (FMT) மாணவர்கள் இணைந்து ஓர் புது வியாபார மாதிரி ஒன்றை முன் வைத்தார்கள். எந்த வியாபார மாதிரி ஒரு சேவை பொதியாக, அனைத்து சேவைகளையும் உள்ளடக்கியதாக விவசாயிகளுக்கு இலகுவாக இருந்தது.



**மேற்படி சேவை பொதியில் அடங்கிய விடயங்கள் ஆவன**

1. விதை நெல்
2. விதை பரிகரிப்பு
3. நாற்று தட்டு
4. நீர்ப்பாசனம்
5. பராமரிப்பு
6. நாற்று நடும் இயந்திரங்கள்
7. எரிபொருள்
8. நாற்று நடுதல்
9. களை கட்டுப்பாடு

ஆரம்பத்தில் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் என வழங்கப்பட்ட இந்த சேவை மேலும் சில திருத்தங்களுடன் ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் என்ற பெறுமதியில் வடமாகணத்திலும் ஏக்கருக்கு 37,500 என்ற பெறுமதியில் கிழக்கு மாகாணத்திலும் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

விவசாயிகள் ஏக்கருக்கு ஒரு புஸல் அதாவது 20 கிலோகிராம் விதை நெல்லை கொடுப்பதுடன் நிலத்தையும் தயார் செய்து பண்படுத்தி கொடுத்தல் வேண்டும்.

விதை நெல்லை பரிகரித்து நாற்றுப்போட்டு



அதனை பராமரித்து இயந்திரங்கள், இயக்குனர் , எரிபொருள் , போக்குவரத்து உள்ளடங்களாக குறித்த நாளில் வயலுக்கு சென்று வயலில் நாட்டி விடுதல் வரை அனைத்து சேவைகளும் இந்தக் குழுவினால் தற்பொழுது வழங்கப் படுகிறது.

களை கட்டுப்பாடு விவசாயிகளது பொறுப்பாகும் . அவர்களுக்கு இலகுபடுத்தும் முகமாக கோணவீடர்கள் (Cono Weeder) கம்பெனியால் ஆயிரம் ரூபா நாள் வாடகைக்கு வழங்கப்படுகிறது. அல்லது 20000 ரூபாய்க்கு கொள்வனவு செய்து கொள்ளவும் முடியும்.

மேற்படி பயிர் செய்கை நடவடிக்கைகளை உள்ளடக்கிய வியாபார மாதிரியை தங்கள் கிராமங்களிலும் செயல்படுத்த விரும்பும் இளைஞர்களை இந்த பட்டதாரிகள் வரவேற்பதுடன் அவர்களுக்கு பயிற்சிகள் சான்றிதழ்கள் வழங்கி ஆரம்ப கட்ட மேற்பார்வை சேவையும் வழங்கி வருகிறார்கள் 2024 சிறுபோகத்தில் கிழக்கு மாகாணத்தில் இப்பட்டதாரிகள் குழுவினால் மேலும் நான்கு இளைஞர் விவசாய குழுக்கள் இந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தி ஆகும்.

வீசி விதைப்பு மற்றும் நாட்டு நடுகை காண செலவுகளை ஒப்பிடும் பொழுது ஆரம்பச் செலவு இயந்திர நெல் நாற்று நடவு நடுகையில் அதிகமாக இருந்த பொழுதிலும் ஒட்டுமொத்த செலவுகளுடன் ஒப்பிடும்பொழுது ஏக்கருக்கு 20,000 தொடக்கம் 30 ஆயிரம் ரூபாய் செலவு குறைவாகவே வருகிறது இதற்கான காரணம் புல் நாசினி, கிருமி நாசினி , பூச்சி நாசினிகள் போன்றவை அவசியமில்லை அல்லது அவற்றிற்கான தேவை மிக மிகக் குறைவு என்பதனால் ஆகும். அத்துடன் ஏக்கருக்கு 20 தொடக்கம் 30 சதவீதம் விளைச்சலும் அதிகரிப்பதனால் விவசாயிக்கும் நாட்டிற்கும் அதிக நன்மைகள் விளைகிறது என்று கொள்ளலாம்.

பெரும்பாலான நெல் உற்பத்தி நாடுகள் அனைத்தும் இயந்திர நெல் நடவுக்கு மாறிவிட்ட பொழுதிலும் இலங்கை விவசாயிகள் இன்னும் செலவு கூடிய அந்நிய செலாவணி அதிகம் வழியே செல்கின்ற நச்சு நாசினிகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்ற , வீசி விதைப்பில் உள்ளமை கவலை தருகின்ற விடயமாகவே உள்ளது. பெரும்பாலான விவசாயிகள் மாற்றங் களை நாடி முன்னேறுகின்ற பொழுதிலும் இந்த மாற்றம் போதாமல் உள்ளது .

**மகேஸ்வரன் ரஜிதன்,**
**(TP 0777 90 6383)**
**நிறுவனர் & இயக்குனர்**
**இந்திரா குழுமம் கிளிநொச்சி**

**விரிவுரையாளர் (வருகை), விவசாய இயந்திரவியல் துறை, விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# நாட்டின் வருமானத்தை மக்கள் அனுபவிப்பது எப்போது?

வாசகர்களுக்கு வணக்கம்!

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மெதுவாக மீண்டு கொண்டிருக்கிறது என்பதை ஒரு மகிழ்ச்சியான செய்தியாக அரசு கூறிவருகிறது. அதன் பயனை மக்கள் இன்னமும் நேரடியாக அனுபவிக்க ஆரம்பிக்காவிட்டாலும் நாட்டின் அரசாங்கம் அதனை அனுபவிக்க ஆரம்பித்துள்ளது. புள்ளிவிபரங்களும் அதனைத்தான் கூறுகின்றன.

இந்த ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான அரச வருமானம் திட்டமிட்டதை விடவும் – எதிர்பார்த்ததை விடவும் ஆறு வீதத்தினால் அதிகரித்திருப்பது ஆச்சரியப்படவைக்கிறது.

வழமையில் எமது தேவைகளின் அடிப்படையில் நாம் திட்டமிடும் அல்லது எதிர்பார்க்கும் வருமானம் எம்மை வந்தடைவதில்லை. அதனால் துண்டுவிழும் தொகை கடனாக மாறி வந்து கழுத்தை நெரிக்கும். அவ்வாறன கடன்களின் பெருக்கமே நமது நாடு வங்குறோத்து நிலைக்கு செல்ல காரணமாக அமைந்தது.

ஆனாலும் இந்த முதலாவது காலாண்டில் நாட்டிற்கு வருமானம் ஈட்டித்தரும் துறைகளான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், கலால் திணைக்களம் ஆகியவை மூலமே பிரதானமான வருமானம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இதில் கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம் ஆகிய இரண்டும் முழுமையாகவும் சுங்கத்திணைக்களம் பகுதியாகவும் உள்நாட்டு மக்களின் பணத்தையே வருமானமாக ஈட்டுகின்றனர். இதனால் நாட்டு மக்கள் பொருளாதார சுமை அதிகரிக்க அரசு கடன்சுமையில் இருந்து மீண்டெழுவதாக கணக்குக்காட்டுகிறது.

உண்மையிலேயே அன்னியச் செலாவணி மூலமாக நாட்டிற்கு வரும் வருமானமே சரியான – ஆரோக்கியமான வருமானமாக கருதப்படும். அதற்கான சரியான வழிகளாக ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் கிடைக்கும் வருமானம் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் ஆகியவை கவனிக்கத்தக்க வருமான வழிகளாக காணப்படுகின்றன.

இவற்றில் ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய துறைகளின் மூலம் கிடைக்கும் வருமானம் என்பவை ஏற்கனவே ஒரு நிரம்பல் நிலையை அடைந்துள்ளன. உள்நாட்டு வளங்களான இயற்கை வளம், மனிதவளம் என்பவை எம்மிடம் ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளன. அவற்றினை கொண்டு செய்யப்படும் உள்நாட்டு உற்பத்திகளில் எமது நாட்டிற்கான தேவைக்கு பின்னர் ஒரு தொகுதியே ஏற்றுமதியாகிறது. அவற்றில் பெருந்தோட்டப் பயிர்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் இரத்தினக் கற்கள் என்பவை அடங்கும். அதேபோல் எம்மிடம் உள்ள மக்கள் தொகையில் உரியமுறையில் பயிற்றப்பட்ட ஒருசிலரே வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும். அதிலும் மத்திய கிழக்கு நாட்டுகளுக்கான பணிப்பெண் வேலைவாய்ப்புகளில் பல சிக்கல்களும் உள்ளன. எனவே இந்த இரண்டு துறைகளினூடான வருமானங்களும் இப்பொழுதுள்ளதைவிட பெரியளவில் அதிகரிக்க முடியாதவை.

மீதமுள்ள ஒரு துறையான சுற்றுலாத்துறையானது அளவில்லாத வெளிநாட்டு வருமானத்தினை எமது நாட்டிற்கு தேடித்தரவல்லதாக இருக்கிறது. அந்தத்துறையினை உரிய முறையில் வளர்த்தெடுக்கவேண்டிய கடப்பாடு இந்த அரசிற்கு உள்ளது. அதனை வெறும் சட்டங்களை மட்டும் அறிவித்துவிடுவதுடன் நிற்காமல் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தினால் மிக விரைவில் நாடு மீண்டெழும் என நம்பலாம்.

ஆனாலும் வெறுமனே அரசு எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும் என மக்களாகய நாம் சும்மா வேடிக்கைபார்க்காமல் பங்காளிகளாக மாறினால் நாடுவளரும்போது நாமும் வளரலாம்.

அன்புடன்
ஆசிரியர்

## வாரம் ஒரு சிறு தானியம்-

# சிறுதானிய உணவுகள் ஏன் முக்கியமானவை?

**பூரணி**

**அரிசி உணவுகள் உடல் எடையை அதிகரிக்க கூடும் ஆனால் உடல் எடையை குறைக்க விரும்புவர்கள் சிறு தானியங்கள் மீது கவனம் செலுத்தலாம். இதில் டிரிப்டோபன் (Tryptophan) என்னும் அமினோ அமிலம் உள்ளது. இது பசியை கட்டுப்படுத்த கூடும். செரிமானத்தை பொறுமை ஆக்கும். நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இது பசி உணர்வை உண்டாக்காது. உடல் எடையை கட்டுக்குள் வைக்க விரும்பினால் நீங்கள் சிறுதானியத்தை தினசரி உணவில் சேர்க்கலாம்.**



ஆரோக்கியமான உணவுகள் என்று ஆய்வுகளே சொல்லகூடியவை நம் பாரம்பரியமான உணவுகள் தான். அப்படியான உணவில் சிறுதானியங்களுக்கு தனி இடம் உண்டு. முந்தைய தலைமுறைகளின் ஆரோக்கியத்தில் சிறு தானியங்களுக்கும் பங்குண்டு.

தானியங்களில் கம்பு, சாமை, தினை, வரகு, குதிரைவாலி, கேழ்வரகு, சோளம், கொள்ளு போன்றவை சிறுதானியங்கள். இதில் புரதம், நார்ச்சத்து,கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின்கள் மற்றும் ஊட்டச்சத்துகள் அதிக அளவில் நிறைந்துள்ளது. இது எளிதில் செரிமானம் ஆககூடியவை.

அரிசியின் அளவைவிட சிறியதாக இருக்கும் இந்த சிறுதானியங்கள் குறுகிய காலத்தில் வளரகூடிய பயிர் ஆகும். ஒவ்வொரு சிறுதானியமும் தனித்துவமான மணங் களையும் சுவைகளையும் கொண்டிருக்கிறது. உணவே மருந்து என்பதற்கு நல்ல உதாரணம் சிறுதானியங்கள் என்று சொல்லலாம்.

சிறுதானியங்கள் வெள்ளை, சாம்பல், மஞ்சள், சிவப்பு நிறங்களில் உள்ளது. இது உடலுக்கு தேவையான விட்டமின் பி யின் சிறந்த ஆதாரமாக விளங்குகிறது. உடலுக்கு வேண்டிய ஊட்டச்சத்தின் முழு அடக்கமாகவே சிறுதானியங் கள் விளங்குகிறது. உடலில் ரத்த அணுக்களின் உற்பத்திக்கு தேவையான இரும்புச்சத்தும், செப்புச்சத்தும் (Copper) இதில் உள்ளது.

இதிலிருக்கும் பொஸ்பரஸ், ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த செய்கிறது. தாவரங்களில் இருக்கும் ஊட்டச்சத்துகள் நோய்களுக்கு எதிரான குணங்களை கொண்டி ருக்கிறது. இது புற்றுநோய்க்கும் எதிராக செயல்படகூடிய குணத்தை கொண்டிருக்கிறது. இரத்த சோகை வராமல் தடுக்க சிறுதானியங்களை அடிக்கடி உணவில் சேர்க்கலாம். இது கல்சியத்தையும் நிறைவாக கொண்டிருப்பதால் எலும்புகளை வலிமையாக வைத்திருக்கிறது.

தொடர்ச்சி 19ம் பக்கம்...




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,72,500 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,88,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**

அன்புள்ள ஆசிரியருக்கு,

**உள்ளூர் உற்பத்திகள் கனடா வருமா?**

'தமிழர் பொருண்மியத்தின் மின்னிதழினை வாரம்தோறும் கனடாவில் இருந்தபடியே படிக்கிறோம். அருமையான ஆக்கங்களுடன் வாரம்தோறும் வெளிவருது சிறப்பு. ஒவ்வொரு இதழிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களை பற்றி வரும் நேர்காணல் கட்டுரையினை தவறாமல் படிப்பேன். நல்லதொரு விடயம்.

ஊரில் இருந்துகொண்டே சிறிய மூலதனத்துடனும் அங்குள்ள வசதிகளுடனும் தமது முயற்சிகளை தளராது தொடரும் அவர்களுக்கு வாழ்த்துகள். அவர்களின் உற்பத்திப்பொருட்கள் பல எமக்கு தேவையானதாக இருந்தாலும் அவை இலகுவில் கிடைப்பதில்லை. அதுமட்டுமலாமல் அவர்களின் பொருட்களை கொள்வனவுசெய்தால் எமக்கு தரமான பொருட்கள் கிடைப்பதுடன் அவர்களது வாழ்வாதாரத்தினையும் அது மேம்படுத்தும் என நம்புகிறேன்.

அவ்வாறானவர்களின் உற்பத்திப் பொருட்களை நாங்கள் இங்கே கனடாவிலும் எம்மைப்போல் ஏனைய புலம்பெயர் நாடுகளில் வசிப்பவர்களும் கொள்வனவு செய்ய ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா? தமிழர் பொருண்மியம் ஊடாக அவ்வாறான ஒரு முயற்சி நடந்தால் சிறப்பாக இருக்கும்.

**க. தவகுலநாதன்**
**கனடா.**

**காசோலைகள் தொடர்பாக அறிந்துகொண்டேன்**

உங்களின் தமிழர் பொருண்மியம் இதழ் தொடர்ந்து வாசித்து வருகிறேன். முன்னர் கடைகளில் வாங்கி வாசித் துவந்தேன். இப்பொழுது கைத்தொலைபேசியிலேயே வாசிக்க பழகிவிட்டேன். கட்டுரைகள் இன்னமும் கொஞ்சம் அதிகமாக வருமானால் நன்றாக இருக்கும்.

கடந்த இதழில் காசோலைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய நீண்ட கட்டுரை ஒன்று வந்திருந்தது. நான் வங்கியில் நடைமுறைக்கணக்கு வைத்திருந்தாலும் இது காசோலை தொடர்பான பல தகவல்கள் இதுவரை நான் அறியாதவை. இனிமேல் காலங்களில் காசோலகளை கையாளும்போது இன்னமும் அவதானமாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான தகவல்களை வங்கிகள் எமக்கு தந்திருக்கவேண்டும். எமது அறியாமை அவர்களை அதிக லாபம் சேர்க்க வைப்பதால் அந்த நல்ல காரியத்தினை அவர்கள் செய்வதில்லை.

தொடரட்டும் உங்களின் பணி.

**சொ. கோகுலன்**
**சுயதொழில் முயற்சியாளர்**
**யாழ்ப்பாணம்**

**கிழக்கிற்கும் வருமா?**

பாடசாலைக்கால நண்பி ஒருவரினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த சில வாரங்களாக தமிழர் பொருண்மியம் இதழினை வாசித்து வருகிறேன். தரமான தகவல்களை தாங்கி வருகிறது. தேவையான பல விடயங்களினை தமிழ் மொழியில் வாசிக்கக் கிடைத்ததில் மகிழ்ச்சி. ஏனைய வார இதழ்கள்போல் இடையில் நின்றுவிடாது தொடர்வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இருப்பினும் ஒரேஒரு குறை. உலகத் தமிழர்களுக்கான பொருளாதார இதழ் என கூறிக்கொள்ளும் உங்களின் பத்திரிகையில் கிழக்குமாகாண தவல்களை அதிகம் பார்க்க கிடைப்பதில்லை. அதேபோல் தமிழர் பொருண்மியம் என ஒரு இதழ் வெளிவருவது எமது பிரதேச மக்களிற்கு அதிகம் தெரிந்திருக்கவும் இல்லை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் நண்பி ஒருவர் மூலமே இது தொடர்பில் அறியக்கிடைத்தது.

எங்களையும் கவனிப்பீர்கள் என நம்புகிறேன்.

**ந. கலாரஞ்சினி**
**ஆசிரியை - மட்டக்களப்பு**

**கேளுங்கள் தருகின்றோம்**

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 100/= |
| உருளைக்கிழங்கு | 180/= |
| பச்சை மிளகாய் | 100/= |
| தக்காளி | 100/= |
| மரவள்ளிக்கிழங்கு | 180/= |
| கோவா | 120/= |
| கரட் | 160/= |
| வாழைக்காய் | 120/= |
| சின்ன வெங்காயம் | 280/= |
| பாகற்காய் | 400/= |
| வெண்டக்காய் | 100/= |
| பயற்றங்காய் | 200/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கக்காய் | 400/= |
| தேங்காய் | 120/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 188/= |
| கனடா டொலர் - | 214/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 314/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 216/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 366/= |
| சுவிஸ் பிராங் - | 325/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 197/= |
| கனடா டொலர் - | 223/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 327/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 381/= |
| சுவிஸ் பிராங் - | 337/= |
| அமெரிக்க டொலர் - | 306/= |

**அருங் கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப”
(முல்லைப்பாட்டு-10 ,காவிரிப் பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்).**

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

முந்தி எங்கட ஊரிலை ஈச்சம் பழம் விக்கிறதைச் சில பெண்டுகள் தொழிலாச் செய்தவை . அவை பள்ளிக்க வாசல்களிலை இல்லாட்டில் கோயில் வாசல்களிலை இருந்து விப்பினம் ஒரு சுண்டு பழம் அப்ப பத்சாம் .

சுண்டு எண்டு நாங்கள் சொல்லுறது பழைய ரின்பால் பேணி . ரின்பால் முடிஞ்சதும் பால் எடுக்க ஒட்டை போட்ட அதுகின்ரை பக்கத்தை சீமெந்துக் குந்திலை இல்லாட்டில் திண்ணையிலை கவிட்டு வைச்சு பத்துப் பதினைஞ்சு தரம் நல்லா ஊண்டி முன்னுக்கும் பின்னுக்கும் சறக் பறக் எண்டு இழுக்க அந்த மூடி கழண்டு வரும். உப்பிடித் தகரப் பேணி சத்தம் போடுறதை உன்ரை கோச்சி புறுபுறுக்கிற மாதிரி இருக்கெண்டுவார் அப்பு .

இப்பிடி ஒரு பக்க மூடி கழண்ட பால்ப்பேணியைத்தான் நாங்கள் சுண்டு எண்டுவம் .

உந்தச்சுண்டாலைதான் முந்தி நாங்கள் அரிசி , மா , சீனி, தூள் எல்லாம் அளக்கிறனாங்கள் . அதுமாதிரி அயலட்டைப் பெண்டுகள்மாசீனிஎண்டுஅயலட்டையுக்கை இரவல் குடுக்க வாங்க உந்தச் சுண்டுகளைத்தான் பாவிச்சவை . அதோட குழைச்ச மாவைச் சுளகில போட்டுப் புட்டுக் கொத்தவும் உதைத்தான் பாவிச்சவை .

அப்ப முந்தி உந்தச் சுண்டு அயலட்டையுக்கை குடுக்கல் வாங்கல் செய்ய உதவி செய்து ஒரு சமாதானத் தூதுவர் மாதிரித்தான் சேவை செய்து இருந்திருக்குது எண்டு சொல்லி அப்பு சிரிப்பார்.

மூண்டுசுண்டுஎண்டதுஒருகொத்துக்குச் சமன் . கொத்து எண்டது மரத்திலை செய்து இருக்கும். நாலு சுண்டு ஒரு சேர் எண்டுவம். உந்தச் சேர் எண்டது பித்தளையில செய்து இருக்கும் .

மூண்டரைச் சுண்டு ஒரு கிலோவுக்குச் சமன் அப்ப ஒரு சுண்டு எண்டது கிட்டத்தட்ட இருநூற்றி எண்பத்தைஞ்சு கிராம் வரும் . முந்தி எங்கட ஊர் சந்தை வழியை அரிசி விக்கிற பெண்டுகள் உந்த சுண்டு கொத்து சேர் மூண்டையும் பாவிச்சுத்தான் அரிசி வியாபரம் செய்தவை . அவை அரிசி விக்கிற பெண்டுகள் சரியான கண்டிப்பும் சண்டித்தனமும் உள்ள ஆக்கள் எண்ட படியாலை அவைக்கு வாயும் பேசும் குண்டியும் பேசும் எண்டு ஆக்கள் பறையிறவை .

தனிய அரிசி மட்டும் எண்டில்லை மற்றத் தானியங்களையும் அளக்க எங்கட ஆக்கள் உந்த சுண்டு கொத்து சேர் மூண்டையும் பாவிச்சவை . இருபத்தி எட்டுக் கொத்து ஒரு புசல் இல்லாட்டில் ஒரு பறை . முந்தி கன கமக்காரர் வீடுகளிலை உந்தப் பறை இருந்தது கண்டியோ எண்டுவா ஆச்சி.

எங்கட சாமத்திய வீடுகளிலை நிறை நாழி வைக்கிறதுக்கு உந்தக் கொத்தைப் பாவிக்கிறவை எண்ட ஆச்சி கொத்துக்கு நாழி எண்டும் பெயர் எண்டுவா . நிறை நாழி எண்டது மங்கள காரியங்கள் நடகேக்கை மங்கள கரமாக இருக்க வேணும்எண்டு கொத்து நிறைய வெள்ளை நெல்லை நிரப்பி வைக்கிறது எண்டிற ஆச்சி எங்கட சாமத்திய வீடுகளில உந்த நிரப்பின நெல்லிலை சத்தகத்தைக் குத்தி அதிலை தேசிக்காயும் குத்தி வைப்பினம் எண்டுவா .

சில இடங்களிலை கலியாண வீடுகளிலையும் குடி பூரல் வீடுகளிலையும் உப்பிடி நிறை நாழி வைப்பினம் எண்டிற ஆச்சி உப்பிடி நிறை நாழி வைக்கிறது எண்டது அந்தக் காலத்திலையும் நடந்திருக்குது எண்டு பரிபாடலிலை இருக்குது எண்டு அந்தப் பாட்டைச் சொன்னா.

“ஆர் ததும்பும் அயில் அம்பு நிறை நாழி” ( பரிபாடல் - 18).

முந்தி அந்தக்காலத்திலை ஒரு காரியம் செய்ய முந்தி கோயிலுக்குப் போய் சாமியைக் கும்பிட்டு ஆரும் நல்ல சொல் சொல்ல மாட்டினமோ எண்டு காத்துக்கொண்டு நிப்பினமாம் உதை விரிச்சி கேட்டல் எண்டு சொல்லிறவை .

உப்பிடி விரிச்சி கேக்க வீட்டிலை இருக்கிற வயது போன பெண்டுகள் தான் போவினம் உவையை பெருமுது பெண்டிர் எண்டு சொல்லிறவை . உப்பிடி விரிச்சி கேக்கேக்கை உந்தை நிறை நாழி வைக்கிற பழக்கம் இருந்திருக்குது எண்ட விஷயம் முல்லைப்பாட்டிலை ஒரு இடத்திலை சொல்லி இருக்குது எண்டிற ஆச்சி அந்தப் பாட்டைச் சொன்னா .

**“அருங் கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப”
(முல்லைப்பாட்டு-10 ,காவிரிப் பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்).**

உந்தப் பாட்டின்ரை அர்த்தம் என்னண்டால் ஒரு அரசன் போருக்குப் போனவன் கன காலம் திரும்பி வரேல்லை . அவள் அரசிக்கு உவன் கோதாரி விழுவான் போனவனைக் காணேல்லை எண்டு சரியான கவலையாப் போச்சுது அதுகும் பொழுது படப் பொழுது பட தனியப் படுக் கேக்கை அவளுக்கு உந்தக் கவலை கூடி அந்தரப் பட்டு ஆதளி மாதளிப் படுவாளாம் . உதைப்பாத்த அங்கை அரண்மனையிலை இருந்த கிழடியள் கொஞ்சப் பேர் என்னடி இவள் இந்த மறுகு மறுகிறாள் எண்டு போட்டு கோயிலுக்குப் போய் நிறைநாழி வைச்சு விரிச்சி கேட்டவையாம் எண்டா ஆச்சி .

ஆச்சி உப்பிடிச் சொல்லவும் கேட்டுக்கொண்டு இருந்த அப்பு அது சரி



நிறை நாழி வைக்கேக்கை உந்த சத்தகம் குத்தி வைக்கிறதைப் பற்றி எங்கேயும் இருக்குதோ எண்டு கேட்டார் . அதைக் கேட்டுச்சிரிச்சஆச்சிஅப்பிடிஒருபாட்டிலையும் இருக்கிற மாதிரித் தெரியேல்லை ஆரும் எங்கட விழுவாங்கள் சத்தகத்தை இடையில செருகி இருப்பங்கள் எண்டா .

## வரி விளம்பரம் — classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

--------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

--------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

--------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

--------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

--------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

--------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

--------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

--------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

--------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

--------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

--------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

--------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448


வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
| --- | --- |
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
| --- | --- |
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# இருப்பை தக்க வைக்குமா யாழ்ப்பாணம்?

## நன்னீர் இல்லாமல் போகும்போது அது தன் இருப்பையும் வேகமாகவே இழந்துவிடும்.



லதா கந்தையா




உயிரினங்களின் வாழ்வுநிலைச் செயற்பாடுகளுக்கு நீர் அத்திய அவசியமானது. வாழ்தலுக்கு ஆதாரமானது நன்னீர். அந்த நன்னீர் மலைகளில்லாத ஆறுகள் பாயாத நிலப் பரப்பான யாழ்ப்பாணத்தில் நிறைந்திருப்பது, யாழ்ப்பாண மக்களின் வரப்பிரசாதமாகும்.

புவிக்கு பெருமளவான நன்னீர் மழைவீழ்ச்சி மூலமே கிடைக்கிறது. மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கும் நீரை மலைகள் ஏந்திக்கொள்ளும்போது ஆறாக அருவியாக பாய்ந்து அழகூட்டுகிறது. உயிர்ப்பிடிமானங்களை தக்கவைக்கிறது. இன்னொருபகுதி நீரானது தரைக்கீழ் நீராக மண்ணில் ஊடுபுகுந்து கொள்கிறது.

இவ்வாறு பொசிவடைந்த நீரை கிணறுகள் குளங்களில் தேக்கி பயன்படுத்திக்கொள்கிறோம். யாழ்ப்பாணத்தின் இருப்பை நிர்ணயிப்பதே தரைக்கீழ் நீராகும். யாழ்ப்பாணம் சமதரைப்பாங்கான பிரதேசமாகும். இதனால் வழிந்தோடி கலலோடு கலந்து வீண் விரயமாவது இயற்கை வழிமுறையில் வரப்பிரசாதமாக இருப்பதால் வழிந்தோடும் தன்மை குறைந்து மண்படுக்கைகளில் தங்கிப் பொசிவடைகிறது.

கூடுதலாகப்பொசிவடைகிறது.

இந்தப்பொசிவடைதல் நீரை யாழ்ப்பாண சுண்ணக்கற்பாறைகள் ஏந்திக்கொள்கின்றன. நிவத்தடி நீராக சேமித்துக்கொள்கின்றன. மட்டுமன்றி யாழ் குடாநாட்டின் பெருவிருட்சங்கள், காணித்தடுப்புகௌகள், வயல்வரப்புகள், புல்வெளிகள், சிறிய குட்டைகள், குளங்கள், கேணிகள் மூலமாக தரைக்கீழ்ப்பொசிவை ஊக்குவிக்கின்றன. இவ்வாறு வரப்பிரசாதமாக கிடைக்கும் நீரானது தன் தரத்தையும் தன் இருப்பையும் இழந்துவிடும் அபாய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது. சுத்தமான நீர் நிறம் மணம் சுவையற்றது. இவ்வாறுள்ள நீர் தன் தன்மை கெடும்போது மாசடைகிறது. தனது இருப்பை சீர்குலைக்கும் போது காணாமல் போகிறது. அளவில் குறைகிறது. கட்டுமானத்தை உடைக்கிறது.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை விவசாயத்துக்குப்பயன்படுத்தும் இரசாயனக் கலவைகள் நன்னீருக்கு பெரும் சவாலாகின்றன. கழிவு நீரோடும் வடிகால் அமைப்புக்கள் சீரற்று இருப்பதும் மலசலகூடங்களின் முறையற்ற விதத்தில் அதிகரித்த கட்டுமானப் பாவனையும் , இலங்கையைச்சூழவுள்ள சமுத்திர நீர் மனித மற்றும் இயற்கைக்காரணிகளால் குடாநாட்டுக்குள் ஊடறுத்து தரைக்கீழ் நீருடன் கலப்பதாலும், அதிகரித்துவிட்ட ஆழ்துளைக்கிணறுகளின் பெருக்கமும், அதிகரித்த சுண்ணக்கல் அகழ்வு மற்றும் அடுக்குமாடிக்கட்டிடங்களை அமைப்பதற்காக பாரியளவில் நிலத்தை தோண்டி அடித்தள அத்திவாரக்கட்டுகளை கட்டுவதனாலும் நன்னீரின் நிலைத்திருப்பு கேள்விக்குறியாகி வருகிறது.

430 சதுரக்கிலோ மீற்றர் பரப்பளவுடைய யாழ் குடாநாடு செறிவான விவசாய நடவடிக்கையை கொண்ட பூமியாகும். விவசாய நடவடிக்கையே ஜீவாதார தொழிலுமாகும். விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் தோட்டச்செய்கையாளர்கள் இலகு முறையைக்கையாள்வதாக நினைத்து இரசாயனக்கலவைகளையே அதிகம் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு பயன்படுத்தப்படும் யூரியா, அமோனியம் சல்பேற்று, பொட்டாசியம், பொஸ்பரஸ், சல்பேற் முதலிய பசளைகளும் கிருமிநாசினிகளும், களைநாசினிகளும் தரைக்கீழ் நீருடன் கலப்பதால் நன்னீர் தன்னுடைய தன்மை கெட்டுப்போகிறது.

மட்டுமன்றி நிலத்துண்டாடல் நிலவளம் குறைதல் அதிக வருமானமீட்டும் மனச்சாட்சியற்ற சிந்தனைகளால் இயற்கையாக கிடைத்த மழைநீரை மண் தேக்கிய நன்னீர் தன் தரத்தை இழந்து போகிறது. யாழ்ப்பாண விவசாயிகள் பெருமளவானோர் நவீன விவசாய நடைமுறைகள் விளைவுகள் பாதுகாத்தல் பற்றிய அறிவுடையவர்கள் அல்ல. பாரம்பரியமாக கடைப்பிடித்த அனுபவ அறிவைக்கொண்டே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் அளவுக்கதிகமாகவே கிருமிநாசினி களைநாசினி உரப்பாவனைகளை பயன்படுத்துகின்றனர். இவை யாவும் பயிர்களின் மூலமாக பயிர்களுக்குப்பாய்ச்சப்படும் தண்ணீரின் மூலமாக தரைக்கீழ் நீருடன் கலக்கின்றது. நன்னீரை பழுதடைய வைக்கின்றது.

இந்த நிலத்தடி நீரோடு கலந்த இரசாயன கலவைகளின் மூலக்கூறுகள் கலந்த நீரை குடிக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு சிறுநீரக நோய்கள் உருவாகியுள்ளன,மட்டுமன்றி புற்றுநோய் பிறக்கும் குழந்தைகள் நீலக்குழந் தைகளாக பிறந்து இறத்தல் கர்ப்பவதிகள் பாதிப்படைதல், ஆரோக்கிய

குறைவுகள் என நோய் நொடிகொண்ட சமுகமாக மாறியுள்ளது. யாழ் குடாநாட்டின் வடிகால் அமைப்புக்கள் மலசலகூட கட்டுமானங்களை ஆராய்ந்தால், வடிகால்களை ஆண்டுக்கு ஒருதடவையாவது புணரமைப்பதில்லை. மழைக்காலங்களில் பிளாஸ்ரிக் கழிவுகளால் லடிகால்கள் அடைபட்டு நீரோட்டத்தை இழந்து நகர்ப்புறத்தை நாற்றமடையச்செய்வதில் இருந்து இதை உறுதிப்படுத்தலாம்.

வடிகால்களுக்குள் புற்கள் முளைத்து கழிவு நீரை நிலக்கீழ் நீரோடு கலந்து அசுத்தமாக்குகின்றது. வடிகால்களில் தேங்கும் நீரினால் நுளம்புக்குடம்பிகள் பெருகி டெங்கு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. மலசலகூடத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைகளைப்பின் பற்றுவதில்லை. இதனால் மலங்கலந்த நீராக நன்னீர் மாற்றமடைகின்றது. ஓடும் நீராக இருந்தால் அது நிலத்தின் கீழே பொசிவடையும் தன்மை குறைந்ததாக இருக்கும். தேங்கும் நீரே பொசிவடைத்து நீரை மாசாக்கிவிடும். அத்தோடு யாழ்ப்பா ணத்தில் சுமாராக பத்து அடிக்கு தோண டும்போது நிலக்கீழ்நீர் கிடைத்துவிடுகிறது. ஆனால் மலசலகூடம் அமைப்பதற்கு ஆறடிக்குத்தோண்டப்படுகிறது.

இது நன்னீரை மேலும் பழுதடைய செய்கிறது. வீட்டுக்கு வீடு மலசலகூடம். அலுவலகங்கள் தொழிற்கூடங்கள் நிறுவனங்கள் பாடசாலைகள் கோவில்கள் என எங்கும் மலசலகூடப்பாவனை இருப்பதானது மனிதர்களின் எண்ணிக் கைக்கு சமமாக இருப்பதாகவே காணமு டிகிறது. இந்த நிலையால் வாந்திபேதி வயிற்றோட்டம் கொலறா, நெருப்புக்காய்ச்சல் போன்ற நீருடன் தொடர்புடைய நோய்கள் தொற்றி யாழ்ப்பாண மக்களை மருத்து வமறைகளை நாடும் நிலைக்குத்தள் ளியுள்ளதுடன் நோயாளிகள் பெருகிய யாழ்மாவட்டத்தில் மருத்துவ மனைகளும் பெருக்கமடைய காரணியாகியுள்ளது.

இது இவ்வாறு இருக்க யாழ்ப்பாண



மாவட்டமானது சுற்றிவரக்கடல் சூழ்ந்த தீபகற்பமாகும். அத்தோடு தொண்டமனாறு கடல்நீரேரி, ஆனையிறவு கடல்நீரேரி, யாழ்குடா கடல்நீரேரி, உப்பாற்று கடல்நீரேரி என யாழ்குடாவை ஊடறுத்துள்ள உப்பேரிகளும் தரையை ஊடறுத்து உள் நுழைத்துள்ளன. இவை பரவலாக பக்கவாட்டாக பரவுவதால் தன்னீர்ப்பிர தேசங்களை உவர்நீராக மாற்றுகின்றன. இவ்வாறு உவர்நீர் உள்ளே புகுவதற்கு மனித நடவடிக்கையே காரணமாகிறது. அதிகரித்த சுண்ணக்கல் அகழ்வு பிரதான காரணமாகிறது.

இவ்வாறு அகழப்படும் பள்ளங்களை நிரவிக்கொள்ள உவர்நீர் உள்ளே புகுந்து கொள்கின்றது. மாதகல், இளவாலை, கீரிமலை, வசாவிளான், புத்தூர் நவக்கிரி உரும்பிராய், வேம்பிராய் என பரவலாக சுண்ணக்கல் அகழப்பட்டு இரவோடு இரவாக திருகோணமலை சீமெந்து தொழிற்சாலைக்கு அனுப்பப்படுவதாக அண்மையில் யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டி இருந்ததை காணலாம்.

உண்மையில் அந்த இடங்களிலே இருபதடிக்கு குறையாதளவு சுண்ணக்கல் அகழப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். முருகைச்சுண்ணக்கற்கள் காலத்துக்கு காலம் வளரும் இயல்புடையவை. சட்டப்படி இரண்டடிக்கு அவற்றை அகழ முடியும் ஆனால் பேராசை கொண்ட யாழ்ப்பாண சுயநலமிகள் அவற்றைத்தோண்டி விற்பதிலே ஆர்வங்காட்டுகிறார்கள் பின்விளைவுகளை விளங்கிக்கொள்ளாமல். ஏற்கனவே தொலைநோக்குச்சிந்தனையோடு காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சா லையை போரின்பின் மூடிக்கொண்ட யாழ் புத்திஜீவிகள் தொலைநோக்கற்று தொலைந்துபோய் நடவடிக்கைகளை மேற்கொள்ள பின்வாங்குவதானது யாழ்பாண மண்ணின் அழிவுக்கே காரணமாகிறது.

யாழ் குடாவின் 65% மான கரையோரப்பிரதேசங்கள் இவ்வாறான நன்னீருடன் உவர்நீர் கலந்ததால் பாதிப்படைந்து நீருக்காக திண்டாடுகின்றன. நாவாந்துறை, பாசையூர், குருநகர், கொட்டடி, தீவுப்பகுதிகள், மாதகல், தொண்டமனாறு, ஆனையிறவு, பூநகரி என பரவலாக கரையோரப்பிரதேசங்கள் நன்னீருக்காக திண்டாடுகின்றன.

சுமார் முப்பது வருடத்துக்கு முன்னர் ஓகோ ஆகா என செய்கை செய்த முந்திரி கைச்செய்கை வீழ்ச்சியடைந்தது நன்னீர்ப்பற்றாக்குறையாலேயே. உண் மையில் யாழ் குடாநாட்டின் ஆழ்து ளைக்கிணறுகளின் பாவனை, சிக்கனமற்ற நீர்ப்பாவனை, மின்சார மோட்டர்களினால் நீரை உறிஞ்சுதல் போன்ற காரணங் களாலும், போதிய விழிப்புணர்வின்மை, பேராசை, யாழ் குடாநாட்டின் விவசாயத் திணைக்களங்கள், சுகாதார அமைப்புக்கள், சுற்றுச்சூழல் விற்பன்னர்களின் அசமந் தப்போக்கினாலும் நன்னீரை இழக்கிறது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் நன்னீர் இல்லாமல் போகும்போது அது தன் இருப்பையும் வேகமாகவே இழந்துவிடும்.



# முதல் காலாண்டில் இலங்கை வரி வருவாய் இலக்கை 6% தாண்டியுள்ளது

## Sri Lanka exceeds tax revenue target by 6% in first quarter




மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த முதல்காலாண்டில்இலங்கையின்வருவாய் சேகரிப்பு அமைப்புகள் 6 சதவீதம் வரி வருவாய் இலக்கை விஞ்சி சாதனை படைத்துள்ளன என்று அரசின் வருவாய் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

"பல வருட கடினமான சவால்களுக்குப் பின்பு, 2024 முதல் காலாண்டில் எதிர்பார்க்கப்படும் அரச வருவாயை ஈட்டிக் கொள்ள முடிந்தது," என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் 4,106 பில்லியன் ரூபா மொத்த வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

"கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் அரசாங்கத்தின் வருவாய் மட்டம் குறைந்ததே. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலக்கை விட அதிகமான சாதனைகள் மற்றும் வருவாய் முறை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, 2024 வருவாய் இலக்குகளை அடையக்கூடிய ஆண்டாக மாறும்," என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இலங்கை சுங்கம், கலால்திணைக்களம் மற்றும்உள்நாட்டு இறைவரித்திணைக்களம் ஆகிய மூன்று வரி வருவாய் சேகரிப்பு அமைப்புகளும் முதல் காலாண்டில் 834 பில்லியன் இலங்கை ரூபாவைச் சேகரித்துள்ளன. இது ஒரு சிறந்த இலக்காக பொருளாதார வல்லுநர்கள் கூறுவது மட்டுமல்லாது உலக வங்கியும் இதனை பாராட்டியுள்ளது.

"இது எதிர்பார்க்கப்படும் வருவாய் இலக்கான 787 பில்லியன் ரூபாவை விட 6% அதிகமாகும்"என்று அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன.

2024 ஆம்ஆண்டின்முதல்காலாண்டில் 381பில்லியன்ரூபாவாக இருந்த இலக்குடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்தனது இலக்கை 13 வீதத்தால் தாண்டி 430 பில்லியன் ரூபாவை எட்டி யுள்ளது என்று அறிக்கையில்சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களம் 353 பில்லியன் ரூபா இலக்கை எட்டியுள்ளதாகவும், கலால் திணைக்களம்வருமானக்கோரிக்கைகளில் 96% ஐ அடைந்து முதல் காலாண்டில் 51 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது என்றும் மேலும்அறிக்கையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை அரசாங்கம்15%ஆக காணப்பட்ட பெறுமதி சேர் வரியினை (VAT) 18%ஆக அதிகரித்தமை, புதிய வரிகளை அறிமுகப்படுத்தியமை மற்றும் 3 பில்லியன்டாலர்வெளிநாட்டுநிதிஉதவியினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளினை இணங்கும் முகமாக முன்மொழியப்பட்ட பல வரி சீர்திருத்தங்களின் கீழ் வருவாயை அதிகரிக்க அரசாங்கம் தனிநபர் வருமான வரிகளை அதிகரித்தமையும் எதிர்பார்த்த இலக்கினை அடைய இதற்கு சாதகமாக அமைந்துவிட்டது.

அரசின் செலவினங்களில் சிலவற்றைக் குறைக்காமல், அதிக வரி விதிப்பதற்காக மக்கள் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். சில




முக்கிய அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார்மயமாக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

இருப்பினும், இந்த நடவடிக்கைக்கு எதிராக படிப்படியாக அதிகரித்து வரும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அந்த செயன்முறை தாமதத்தை எதிர்கொண்டது.

இலங்கை அரசாங்கத்தின் வரி வருவாய் இலக்குகளை சிறப்பாக ஈட்டியமை சாதகமான செய்தியாக இருந்தாலும், மக்கள் அல்லது வணிகங்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள குறிப்பிட்ட வரி நிவாரணங்கள் எதுவும் அரசாங்க நடப்பு கொள்கைகளில் குறிப்பிடப் படவில்லை. இருப்பினும், வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இங்கே சில சாத்தியங்கள் உள்ளன:

**சாத்தியமான நிவாரணங்கள்:**

» இலக்கு வரிச்சலுகைகள்: கஷ்டங்களை எதிர்கொள்ளும் குறிப்பிட்ட துறைகள்அல்லது தொழில்கள்துறைகளுக்கு வரிச்சலுகைகளை அரசாங்கம்பரிசீலிக்கலாம். இது வளர்ச்சி மற்றும் வேலை உருவாக்கத்தை ஊக்குவிக்கும்.

» குறிப்பிட்ட அதிக சுமை வரிகளில் குறைப்பு: குறிப்பிட்ட வரிகள் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தினால் அரசாங்கம் அவற்றை துல்லியமாக இனங்கண்டு குறைப்பதோடு ஒட்டுமொத்த வருவாய் இலக்குகளை பாதிக்காவண்ணம் கொள் கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

» அதிகரித்த வருமான கட்டமைப்பு வரி அறவிடும் முறைமையை ஏற்படுத்தலாம்: அதிக வருமானம்ஈட்டுபவர்களுக்கு அதிகரித்த வருமான கட்டமைப்பு வரிகளை உயர்த்துவது நடுத்தர வர்க்க சம்பாதிப்பவர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும்.




» மேம்படுத்தப்பட்ட அரசாங்க செலவின திறன்: அதிக அரசாங்க செலவினங்களுடன் அதிக வரிகள் பற்றிய பொதுமக்களின் அக்கறை, செலவினங்களை ஒழுங்குபடுத் துவதற்கான இடத்தை பரிந்துரைக்கின்றது. இது இலக்கு திட்டங்கள் அல்லது வரி குறைப்புகளுக்கான ஆதாரங்களை தேவையான மற்றும் அத்தியாவசியமான ஏனைய துறைகளுக்கு வழங்குவதற்கு பேருதவியாக இருக்கும்.

**கவனிக்க வேண்டிய ஏனைய முக்கியமான விடயங்கள்:**

» அரசாங்கத்தின் கவனம் ஐஆகு இன் நிபந்தனைகளை மற்றும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும்முக்கியமாக பொருளாதார மீட்சியைத் தொடர்வதற்கும் வலுவான வருவாயைப் பராமரிப்பதில் கவனம் செலுத்துவதாக இருக்கலாம்.

» எந்தவொரு வரிநிவாரண முடிவுகளும் பொருளாதார நிலைமை மற்றும் பொதுத் தேவைகள் பற்றிய முழுமையான பகுப்பாய்வைப் பொறுத்துள்ளது.

பரந்தளவில்நமது பார்வையை செலுத்தும் பொழுது இலங்கை அரசின் நிதி நிலைமை மேம்பட்டு வருவதாகத் தெரிகின்றது. வரி விலக்கு உத்தரவாதம் இல்லை என்றாலும், எதிர்காலத்தில் மக்கள் மற்றும் வணிகங்கள் மீதான சுமையை குறைக்க அரசாங்கம் சில நடவடிக்கைகளை செயற்படுத்த வாய்ப்பு உள்ளது.

+94-777-802-900 | Email: swaminathan@agsarma.com

# நான் இந்த தொழிலை ஆரம்பிக்கும்போது எனக்கென்று எதுவுமே இருக்கவில்லை

**நேர்கண்டவர் - ஞானம் கவினி**

**இலங்கையின் வடக்கே தாயகத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உரும்பிராய் பகுதியில் தன்னுடைய சுய தொழில் மூலம் குடும்பத்தின் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு கரம் கொடுக்கும் சுய தொழில் முயற்சியார் சரஸ்வதி உற்பத்திகளின் உரிமையாளர் உதயகுமார் சுதாயினி அவர்களை தமிழர் பொருண்மியம் நேர்ண்டது.**

சிறுவயதில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையால் கல்வியை இடை நிறுத்திவிட்டு சிறிய சிறிய தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வந்தேன், ஆனால் கல்வி கற்கும் காலத்தில் இருந்தே எனக்கு ஒரு சிறந்த தாதியாக வேண்டும் என்கின்ற அவா இருந்து கொண்டே இருந்தது.

எனது விருப்பத்திற்கு ஏற்றார் போல், தனியார் வைத்தியசாலை ஒன்றில் தாதியராக பயின்று கொண்டே பணிபுரியும் சந்தர்ப்பம் கிடைத்தது கிட்டத்தட்ட 15 வருடங்களை மிகவும் மகிழ்ச்சியோடு தாதியர் பணியில் கழித்திருக்கிறேன்.

திருமணமான பின் குழந்தைகள் குடும்பம் என்று அவர்களை கவனிக்க வேண்டிய தேவை வந்தபோது தான் ஏதாவது சுய தொழில் செய்ய வேண்டும் என்கின்ற எண்ணமும் ஏற்பட்டது.

குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு வீட்டில் இருந்தேசம்பாதிக்கக்கூடிய ஒரு வழியை தேடினேன் , அப்போதுதான் உணவு பண்டங்களை உற்பத்தி செய்வதில் எனக்கு ஆர்வம் இருப்பது என்பதை உணர்ந்து அந்த தொழிலை நான் கையில் எடுத்தேன் என்கிறார்.

2018 ஆம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் தனது சுய தொழில் முயற்சிக்கான முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறார் சுகாசினி, தன்னிடம் இருந்த சிறு ஆபரணங்களை முதலீடாகக் கொண்டு உணவு உற்பத்திகள் சிலவற்றை மிகவும் சிரத்தையோடு ஆரம்பித்திருக்கிறார்,

இந்த உற்பத்திகளின் வரிசையிலே முதலாவதாக தானியங்களைக் கொண்டு கற்பவதிகளுக்கும் சிறுவர்களுக்கு உகந்த சத்துமா ஒன்றினை திறன் பட தயாரித்தி ருக்கிறார்.

இந்த சத்துமாவின் தரத்தை பரிசீலிப் பதற்காக சுயமாகவே 30 சிறுவர்களுக்கு இந்த சத்து மாவை தொடர்ச்சியாக வழங்கி வந்ததாகவும் ,அவர்களது நிலையில் மாற்றம் ஏற்பட்டிருந்ததாகவும் வைத்திய அதிகாரிகள் கூறியதாக சுதாயினி பெருமையோடு கூறுகிறார்.

முதல் சில ஆயிரங்களோடு ஆரம்பித்த இந்த உணவு உற்பத்தி தற்போது 15 வகையான உற்பத்திகளை செய்து வருவதாகவும் ,சரஸ்வதி உற்பத்திகளுக்கு தற்போது சந்தையில் ஒரு நல்ல கேள்வி இருக்கிறது என்றும் கூறுகிறார் .




எனது சுயதொழில் முயற்சிக்கு குடும்பத்தில் உள்ளவர்கள் பெரிதும் ஆதரவை வழங்குகி றார்கள் .

அவர்களுடைய ஆதரவு தான் தொடர்ச் சியாக இத்தகைய தொழில் முயற்சிகளில் ஈடுபடு வதற்கும் ,பயிற்சிகளில் கலந்து கொள்வதற்கும் உறுதுணையாக இருக்கிறது என்கிறார்.

தற்போது வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களுக்கும் மற்றும்எமது நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வாழ்கின்ற வழிநாட்டவர்களுக்கும் தனது சத்துமாவினை அனுப்பி வைப்பதோடு ஏனைய உணவு பண்டங்களையும் விற்பனை செய்வதாக கூறுகிறார்,

அம்மாச்சி உணவகத்தில் நடாத்தப்படும்


உதயகுமார் சுதாயினி

சுய தொழில் முயற்சியாளர்களுக்கான விற்பனையகத்தில் தனது பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும்மேலும் சமூகத்தில் உள்ள சில அங்காடிகளில் தற்போது தனது பொருட்களை அறிமுகப்படுத் தியிருப்பதாகவும் தெரியப்படுத்தும்சுகாசினி தனது பொருட்களுக்கு இருக்கின்ற கேள்விகளை அதிகரிப்பதற்காக இன்னும் அதிகமான தரத்தையும் உற்பத்தி திறனையும் கூட்டுவதற்கு மிகவும் முயற்சி செய்து வருகிறார்.

தனி ஒருவராக குடும்பத்தினரின் ஆதரவோடு ஆரம்பித்த சரஸ்வதி உற்பத்தி நிலையம் தற்போது சமூகத்தில் அசல் பெண்களுக்கேனும்வேலைவழங்கக்கூடிய அளவுக்கு வளர்ந்திர்க்கிறது. மேலும் இந்த நிலையத்தை விருத்தி செய்யும்போது பலருக்கு வேலைவாய்ப்பைவழங்குவதோடு உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் ஆவலோடு இருக்கிறார்,

தற்போது தனிநபர் ஒருவருடைய வாடகை நிலையத்தில் இயங்கிக் கொண் டிருக்கும் இந்த விற்பனை நிலையம் ஒரு




சொந்த காணியில் சொந்தக் கட்டிடத்தில் இயங்க வேண்டும் அப்போது , எந்த பிரச்சினையும் இல்லாமல் வியாபாரத்தை விரிவடையச் செய்ய முடியும் என்கிறார்.

உங்களது தொழில் முயற்சிக்கான வழிகாட்டுதல்களை யார் செய்து கொண்டிருக் கிறார்கள் என்று கேட்டபோது?

கோப்பாய் பிரதேச செயலகத்தில் உள்ள சிறு தொழில் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள் எங்களுக்கான பயிற்சி களையும் சந்தைப்படுத்த வாய்ப்புகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்,

ஆனால் எங்களுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை நாங்கள் தேடிக்கொள்ள வேண்டும் அதனை அதிகரிப்பதற்கான சில முயற்சிகளில் நாங்கள் தான் ஈடுபட வேண்டும்.

தற்போது வடக்கில் உள்ள பல விற்பனை நிலையங்களுக்கு ,இலங்கையின் தென் பகுதியில் இருந்தே அதிகமான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன ,ஆனால் எங்களுடைய நிலத்தில் ஏராளமான வளங்களும் பயிர்களும் இருக்கிறது.

இவற்றை பக்குவப்படுத்தி அதற்கு மதிப்பு கூட்டி நாங்கள் பெறுமதி மிக்க பொருட்களாக கொள்வனவாளர்களுக்கு கொடுக்க முடியும். அதற்கான சில முயற்சிக ளில் ஈடுபட்டிருக்கிறோம் என்கிறார்.

எல்லோரும் ரசாயன உணவுகளையோ அல்லது உடனடியாக தயாரிக்கப்பட்ட உணவுகளையோ விரும்பி நுகர்கின்ற கலாச்சாரத்தில் நாங்கள் இருக்கின்றோம், இயந்திரத்தனமான இந்த உலகத்தில் எல்லோருக்கும் உடனடியாக எல்லாம் கிடைக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இதற்கு ஏற்றார் போல் நாங்கள் ரசாயனமற்ற உடனடியாக தயார் செய்யக்கூடிய உணவு வகைகளை உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

எங்களுடைய உள்ளூர் உற்பத்திகள் கவனிக்கப்பட வேண்டுமானால் நாங்கள் பொருளின் தரத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும், அத்தோடு வாடிக்கையா ளர்களுக்கு எது தேவைப்படுகிறது என்பதை முறையாக கணித்து அதற்கு ஏற்றார் போல் நமது உற்பத்திகளை பெருக்க வேண்டும் ,அப்போதுதான் சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்வதோடு எமது நிறுவனத்திற்கான பெயரையும் நிலை நிறுத்த முடியும் என்கிறார்.

இவருடைய சரஸ்வதி உற்பத்திகள் ஒவ்வொன்றையும் பார்த்தபோது மிகவும் தரமாகவும் அதே நேரம் அழகாகவும் இருந்தது, ஒரு சிறந்த சந்தைப்படுத்தல் நிபுணரைப் போல தன்னுடைய பொருட் களுக்கான விளம்பரத்தை வழங்குகின்ற இவர் தனது பொருட்களை உற்பத்தி செய்வதிலும் முழுமூச்சோடு அதிக கவனம் செலுத்துகிறார்,

தற்போது வேலைத்தளத்தில் இரண்டு பெண்களை வேலைக்கு அமர்த்தி இருக்கிறார் அவர்கள் இவருக்கான உதவிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் தான் வாழ்வது மட்டுமல்லாது ஏனையொருக்கும் வழி காட்டுவது என்பது ஒரு ஆத்ம திருப்தியான விடயம் தான் அதனை மிக்க மகிழ்ச்சியோடு செய்து கொண்டிருக்கிறார் சரஸ்வதி உற்பத்திகள் நிறுவனத்தின் நிறுவனர் .

சொந்த கட்டிடமும் அல்லது இயந்திரங் களோ இல்லாமல் துணிச்சலாக ஒரு தொழிலை ஆரம்பித்து இன்று வெற்றியாக அதனை நடாத்திக் கொண்டிருக்கும் இவரிடம், இப்போதும் வீடுகளில் வீணாக நேரத்தை கழிக்கும் மனிதர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று வினாவி னோம்.

அதுக்கு அவர் சிரித்தபடி ,நான் இதற்கு என்ன பதிலை சொல்ல முடியும் ?

நான் இந்த தொழிலை ஆரம்பிக்கும்போது எனக்கென்று எதுவுமே இருக்கவில்லை என்னுடைய குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நான் நினைத்தேன் ,என்னுடைய கணவரின் ஊதியத்தில் தொடர்ச்சியாக குடும்பத்தை நடத்திக் கொண்டிருந்தபோது அவருக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவ வேண்டும் என்ற ஒரு உந்துதலே என்னை சுய தொழில் முயற்சியால் ஆக்கியிருக்கிறது.

எங்களுக்கு கடவுள் கொடுத்திருக்கின்ற உடல்பலத்தையும், நேரத்தையும் இயற்கை வளங்களையும் பயன்படுத்துவோம் என்றால் உண்மையில் நாங்கள் வேறு யாரிடமும் வேலைக்கு கைகட்டி கொண்டு நிற்க வேண்டிய தேவை வராது.

முக்கியமாக பெண்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு, ஒரு சுய தொழில் செய்ய வேண்டி யது மிகவும் அவசியமாக இருக்கிறது . ஆரம்பத்தில் இது மிகவும் கஷ்டமான விடயமாகத் தான் இருக்கும் ஆனால் காலப்போக்கில் நாங்கள் எங்களுடைய தொழில் என்று பெருமையாக சொல்லிக் கொள்வதற்கு இது வழிவகுக்கும்.

நான் ஒரு சுய தொழில் முயற்சியாலராக மாறிய பின்பு சிறந்த தொழில் முயற்சியால் என்கின்ற விருதினை இரண்டு தடவைகள் பெற்றிருக்கிறேன், இது எனக்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

சம்பாத்தியத்திற்காக மாத்திரம் மாற்றி ஒரு பெண்ணுக்கு தன்னம்பிக்கையையும், நல்ல தொடர் பாடல்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு வரப்பிரசாதமாகவே நான் சுய தொழிலை பார்க்கிறேன் என்கிறார் சரஸ்வதி உற்பத்திகளின் உரிமையாளர் உதயகுமார் சுதாயினி.



**பணத்தை அடைய வெளிநாடுதான் வழி என்பவர்கள் அங்கிருந்து வரும் பணத்தை மட்டுமே பார்க்கிறார்கள். அதை அங்குள்ளவர்கள் எப்படி உழைக்கிறார்கள் என்பதை அறிவதில்லை. அங்கிருந்து உறவினர்கள் அனுப்பும் படங்களில் அவர்கள் காட்டும் அழகிய தோற்றங்களுக்கும் அதன் பின்னணிக்கும், அவர்கள் பார்க்கும் வேலைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது**

# வாழ்வியலை நாசமாக்கும் புலம்பெயர் மோகம் பகட்டிற்கு பலியாகும் ஒரு தலைமுறை

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

**"நாய்வாலை அளவெடுத்து
நறுக்கித்தள்ளின் நற்றமிழை எழுத
எழுத்தாணியாமோ
பேய் வாழும் சுடுகாட்டை
பெருக்கித்தள்ளி பெரிய
விளக்கேற்றி வைத்தால் வீடதாமோ
தாய் வார்த்தை கேளான்
சகசண்டிக்கு எது
சாற்றிடினும்உலுத்த குணம் தவற
மாட்டான்"**

யாரோ பாடி வைத்துவிட்டுப் போய் விட்டார்கள். ஆனால் இன்றைய அஉலகில் தாய் வார்த்தை கேட்பவர்களின் நிலை மிக மோசமாகி வருகிறது. தாய் என்ற சொல் தெய்வம் எனக் கொள்ளப்பட்டது. இன்று தாய் என்ற சொல் தன்னலமும் பேராசையும்கொண்டதாக மாறியிருக்கிறது. விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்தாலும். ஒருதாய் தன்மகன் வெளிநாட்டுக்குத்தான் போக வேண்டும் என்று அடம்பிடிக்கிறாள். அந்தமகனுக்கு தாய் தந்தையரை சகோதரஉகளை பிரிவது வேதனையாக இருந்தாலும் வெளிநாடு என்பதை ஒரு சொர்க்கபுரியாகத்தான் பார்க்கிறான். அதையும் அந்தத்தாய் தமது ஒரே வளமான வீடு வளவை விற்று ஐம்பது லட்சம் பணத்தை முகவரிடம் கொடுக்கிறாள். பயணமும் சட்டமுறையானது அல்ல. பணத்தையும் மகனையும் முகவரிடம் கையளித்த தாய், ஆறுமாதங்களாக தன்மகன் எங்கே என்பது தெரியாமல் அழுது திரிகிறாள். அவள் தன் கணவனை ஓயவிடாமல் மகனை தேடும்படி தொந்தரவு செய்கிறாள். அந்த பரிதாபத்துக்குரியவர் யாரிடம் போய் கேட்பது என்றறியாமலும் மனைவியின் முகத்தை தரிசிக்க பயந்தும். தெருவில் அலைகிறார். " நான் சொன்னேனே கேட்டாளா? அந்தக்காணியை வித்து காசு குடுக்குமட்டும் அவள் ஓயவில்லை" என்றரற்றுகிறார் அவர்.

ஏண்பது லட்சம் செலவிட்டு இன்னுமொரு பெண் மகனை அனுப்பிவிட்டு "அப்பாடா போயிட்டான்" என்று மகிழ்ச்சியுடன் சுற்றித்திரிய, மூன்று மாதத்தில் அவன் சுவரில் அடித்த பந்து போலதிரும்பிவந்துவிட்டான். இன்னுமொரு மகன் வெளிநாடு சென்று பத்து வருடங்களாகின்றன. அங்கே செய்வது மிக கடினமான வேலை விசா இல்லாததால் இடத்துக்கு இடம் ஒடிக்கொண்டிருக்கிறான். "அம்மா நான் திரும் வரவா என்னால முடியல்லை"என்று போனில் அழுகிறான். அம்மா சொன்னாள் "கொஞ்சம் பொறப்பா சின்னவளின்ர வீடுகட்டி குறையாக்கிடக்கு நீ வந்தா எல்லம் பிசகிப்போம் அவள் கலியாணம் முடிச்சபிறகு வரலாம்" இது இப்படி இருக்க பிள்ளைகள் திருமணம் செய்வதை விரும்பாத பெற்றோர்களும் இதில் அடக்கம்.

என்அருகே ஒரு பெண்பிள்ளை



தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்கிறாள். ஐயாயிரம் ரூபா சம்பளத்தில் தனது ஏயெல் படிப்பை முடித்து வேலைக்கு சேர்ந்தவள் படிப்படியாக முன்னேறி அதே நிறுவனத்தில் நாற்பத்தையாயிரம் ரூபா சம்பளம் பெற்றாள். அவளது பெற்றோரே அவளைக் கேட்டுவந்த கலியாண வாய்ப்புகளை எதோ சொல்லிதடுத்துவிட்டனர். அதேசமயம் அவளுடைய தங்கைக்கு திருமணமாகி குழந்தையும் பிறந்துவிட்டது. முடிவில் அவள் தனக்குத்தானே ஒரு தரகரிடம் பேசி முப்பத்து மூன்று வயதில் திருமணம் செய்தாள். இதேபோல மகனது திருமணத்தை தடுத்த தாய் தாய் சொல்லை



தட்டாத அந்தப்பிள்ளை இப்போது வயோதிபத்தில் தனியனாய் தானும் தான் கொண்டநோயும் தான் படுத்த பாயுமாக வாழ்கிறார்.

இவர்களுடைய பெற்ற தாயும் பிள்ளைகள் மேல் கண்மூடித்தனமான பாசத்தை கொண்டிருந்தமையே இந்த நிலைக்கு காரணம். தொலைக்காட்சி சீரியல்களில் வரும் அம்மாக்களும் பிள்ளைகளும் இப்படித்தான் வடிவமைக்கப்படுகிறார்கள். அம்மா செய்வது தப்பாக தெரிந்தாலும் பிள்ளை எதுவும் பேச மாட்டான். பேசினால் தொடர் முடிந்துவிடும் என்பது வேறு. பெரும்பாலும் தாய்களே வில்லிகளாக நாடகங்களில் வருகிறது. அதுவே சமுதாயத்தில் பிரதிபலிக்கிறதா, அல்லது சமுதாயத்திலிருந்து இப்படியான தாய்களை கண்டு பிடிக்கிறார்களா? என்பது கேள்விக்குறிதான்.

எது எப்படியோ எமது வளமும் எமது தொழில் வாய்ப்புகளும் பெருகிக் கிடக்கின்றன. சாதாரணமாக வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை. நுட்பமான வேலைகளோ சாதாரண வேலிஅடைக்க புல்செதுக்க என்பன போன்ற வேலைகளோ எதுவானாலும் ஆள் கிடையாது. பொதுவாக ஆண்கள் சோம்பித்திரிகிறார்கள். பெண்கள் வேலை செய்தாலும் அவர்களை வைத்து வேலியடைக்கவோ பார வேலைகள் செய்விப்பதோ முடியாதே. நாட்கூலி மிக அதிகமாக கிடைக்கிறது. ஒரு கூலித் தொழிலாளி மாதம் இருபது நாள் வேலை செய்தாலே அவன் வாழ போதுமானது. ஆனால் இரண்டு நாட்கள் வேலைக்குப்போனால் அந்தக்கூலியை நான்கு நாட்கள் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு அதன்பிறகே அடுத்த வேலைக்கு போகிறான். அந்த நிலையில்தான் வெளிநாடும் இருக்குமென எண்ணி அங்கே போய் மரத்திலே காசு பிடுங்கும் கனவிலும் சிலர் இங்குள்ள வளங்களை தொலைக்கிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து பருவகாலத்துக்கு காலம் இங்கு வரும் புலம்'பெயர் மக்கள் மிக மெதுவாக தமது கால்களை தாயகத்தில் ஊன்றுவதாக எண்ணிக் கொண்டு இங்குள்ள நிலங்களில் முதலீடு செய்வது அதிகரித்து வருகிறது. புதிதாக இவர்கள் வாங்கிக் குவிக்கும் நிலங்களில் பாரிய வீட்டையும் மதிலையும் கட்டி அச்சறிக்கை பண்ணிவிட்டு இவர்கள் மீண்டும் வெளிநாட்டுக்கே செல்வதை காண்கிறோம் இவர்களுக்கு நிலத்தை விற்றவர்களும் அவர்களைத் தொடர்ந்து வெளிநாடு செல்கிறார்கள்..இந்த நில விற்பனையில் கிளிநொச்சி முதலிடம் வகிக்கிறது. இங்கு நெல்வயல்களும், விட்டுநிலங்களும் மட்டுமல்ல கிளிநொச்சி குளத்தின் நிலமும் விற்பனையாகின்றது.

குளத்துக்குள் வீடா? ஏன வியக்க வேண்டாம் சுடலைக்குள்ளேயும் வீடுகள் கட்டலாம். இன்றைய நகர்ப்புறச்சுடலைகளின் ஏராளமான இடங்கள்மாடிவீடுகளாகிவிட்டன. (பெரிய விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள்) ஆகவே பிணங்களை எரிப்பதால் ஏற்படும் புகையால்' தமக்கு இடையூறு ஏற்படுவதாக சுடலைக்குடியிருப்பாளர்கள் முறைப்பாடும் செய்கின்றனர். இதேபோல குளங்களுக்குள் வீடுகளைக்கட்டியவர்கள். வருடாவருடம் வெள்ள நிவாரணம் பெறுவதும் நடக்கிறது. தமிழ் மக்கள் மட்டுமல்ல உலகமே இன்றைக்கு தமது சொந்த வளங்களை அழித்துக் கொண்டிருப்பவர்களை கை கட்டி வேடிக்கை மட்டுமே பார்க்கிறது.

இப்படி அனுமதியற்ற நிலத்தில் குடியிருக்கும் ஒரு பெண் காணியை பட்டயம் பண்ணித் தரும்படி அதிகாரிகளை கேட்டபோது இவ்வளவு நாளும் ஏன் பதியவில்லை என்றொரு மகத்தான கேள்வியை அந்த அதிகாரி கேட்டார். அதற்கு அந்தப்பெண்,

"ஏனப்பா நான் காணியில் குடியிருந்து தென்னைமரம் மாமரம் எல்லாம் நட்டு அவை காய்க்கின்றன. இவ்வளவு காலமும் நீங்க என்ன செய்தீங்க" என்று கேட்டார்.

எங்கோ கண்ணுக்கு தெரியாமல் காட்டிலல்ல கண்முன்னே நகரத்தில் அரசகாணிகளை பிடித்து ஒரு இரண்டு வருடம் குடியிருந்து விட்டு தமது ஆட்சியுரிமையை பல லட்சங்களுக்கு விற்றுவிட்டு போகிறார்கள். இந்த காணிகளை ஒரு பத்திரம்கூட இல்லாமல் அது அரச நிலம் என்று தெரிந்தும் வாங்கும் நபர், விலையாக பரப்பு ஒன்றிற்கு பதினைந்து லட்சம் கொடுக்கிறார் என்ன துணிவு. சினிமாவில் பல வில்லன்களுடன் சண்டையிடும் கதாநாயகனுக்கு டைரக்டர் இருக்கிறார் என்ற துணிவு காணியை வாங்குவோருக்கு அதிகாரிகளை சமாளிக்கலாம் என்ற துணிவு. எதுஎப்படியோ வெளிநாட்டவர்கள் நிலங்களை வாங்கவாங்க அதை விற்பவர்கள் வெளியேறுவதும் தொடர்கிறது. இது எமது சமுதாயத்தை பாதிப்பது மட்டுமல்ல. வருங்காலத்தில் நமது அரசியல் பலத்தையும் நொருக்கிவிடப் போகிறது அதன்பின் பொருளாதாரம் எப்படி நிமிரும்.



# அருமையான வருமானம் தரும் ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம்

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை




அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்தியாவைவிட மக்கள் தொகை குறைந்த நாடுகள். எனினும் அந்நாடுகள் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை அடைந்துள்ளன. அந்நாட்டு விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணை முறையில் வேளாண்மை மேற்கொள்வதே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும் இதற்கு சிறந்த உதாரணமாக கியூபாவை கூறலாம்.

ஆம் ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் இயற்கை விவசாயத்தில் சாதித்துக் காட்டிய நாடுகள். பட்டியலில் கியூபா, டென்மார்க், போன்ற நாடுகள் விற்பனை செய்யும் உப தொழில்களில் ஈடுபடுவதே ஒருங்கிணைந்த பண்ணை வேளாண்மை முறையாகும். ஒருங்கிணைந்த பண்ணை முறையில் பண்ணை திட்டம் வகுக்கும்போது சிறுபோக மற்றும் பெரும்போக நிலங்களுக்கு ஏற்ப பயிர் திட்டத்தை வகுக்க வேண்டும்.

அந்த பயிர் திட்டத்திற்கு ஏற்ப நன்கு வருமானம் தரக்கூடிய ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று உபதொழில்களை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்து எடுக்கும் உபதொழில்கள் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்க வேண்டும்.

பண்ணையில் விளையும் தானியங்களைக் கொண்டே தீவனக் கலவை தயார் செய்தல் வேண்டும். அப்போது தான் உபதொழில்களுக்கு ஆகும் உற்பத்தி செலவு குறைந்து அதிக லாபம் கிடைக்கும்.

இந்த ஒருங்கிணைந்த பண்ணையில் பயிர்களை பயிரிடுவதில் சுழற்சி முறையை



இருப்பதனை நீங்கள் நன்கு அறிவீர்கள் பொதுவாக விவசாயிகள் பயிர்களை மட்டுமே நடுகை செய்கிறார்கள். இது சில நேரங்களில் அவர்களுக்கு நஷ்டத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. இந்நிலையில் பயிர் நடுகை செய்வதோடு கறவை மாடு, ஆடு, பன்றி, மீன், கோழி, வாத்து, காடை, காளான். போன்றவற்றை வளர்த்து

மேற்கொள்ளலாம். முதல் போகத்தில் நெல் பயிரிட்டால், இரண்டாம் போகத்தில் மக்காச்சோளமும் பயிரிடலாம். அடுத்து ஒருங்கிணைந்தபண்ணையத்தில் செய்யப்படும் மற்ற உபதொழில்கள் குறித்து பார்ப்போம்.



ஒருங்கிணைந்த பண்ணையத்தின் உபதொழில்களில் ஒன்றான கோழி வளர்ப்பு சிறந்த தொழிலாகும்.

நெல்லிலிருந்து கிடைக்கும் தவிடையே கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம். மாற்று பயிர்களில் ஒன்றான மக்காச் சோளத்தையும் கோழிக்கு தீவனமாக பயன்படுத்தலாம். இவ்வாறு பயிர்ச்செய்கையில் கிடைத்த தீவனங்கள் மூலமாக கோழி தீவன செலவை சுமார் 75 சதவீதம் குறைக்க முடியும்.

வளரும் கோழிகளை 8வது வாரத்தில் விற்பனை செய்யலாம். பெருமளவு தீவன செலவு குறைவதால் கோழி விற்பனையில் அதிக லாபம் ஈட்ட முடியும்.

ஒருங்கிணைந்த பண்ணையத்தில் உப தொழிலான மீன் வளர்ப்பை முறையாக செய்தால் நல்ல லாபம் ஈட்டலாம். வளர்க்கும் மீன்களுக்கு உணவாக கோழியின் கழிவுகளையே கொடுக்கலாம். மீன் வளர்த்து. அந்த தண்ணீரை பயிர்களுக்கு பயன்படுத்தலாம் அதிக விளைச்சல் கொடுக்கும்.

அதோடு பண்ணை நிலங்கள் பச்சை பசேலென்று இருக்கும் இதனால் ஆடு. மாடுகளுக்கு தீவனப் பற்றாக்குறை இருக்காது கோழியை வளர்த்து லாபம் ஈட்டுவது போல ஒருங்கிணைந்த பண்ணையில் காடை வளர்ப்பையும் மேற்கொள்ளலாம்.

1000 காடை குஞ்சிகளை வளர்ப்பதற்கு 200 சதுரடி இடம் போதுமானது. இதன் மூலம் மாதம் ரூ.40 ஆயிரம் வரை வருமானம் ஈட்டமுடியும். பயிர்களை அறுவடை செய்தவுடன் பண்ணை குட்டையில் உள்ள நீரை வடிகட்டிவிட்டு வளர்ந்த மீன்களை பிடித்து விற்பனை செய்யலாம்.

இதன் மூலம் விவசாயிகள் நல்ல லாபம் அடைவதோடு நாட்டின் உணவு உற்பத்தியும் தன்னிறைவை அடையும். அதோடு விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்தை இது போன்ற உப தொழில்கள் மூலமே ஈடு செய்து கொள்ள முடியும். சிறிய அளவிலான விவசாய பண்ணைத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு அரசு அனுமதி பெற வேண்டும் என்று கட்டாயம் இல்லை என்பதனை நீங்கள் அறிய வேண்டும். ஒருங்கிணைந்த பண்ணை விவசாயத்தில் ஊடாகத்தான் இலகுவில் லாபம் ஈட்ட முடியும் என்பதனை அதிகமானோர் அறிவதில்லை கடின உழைப்பும் சாமர்த்தியமும் இருந்தால் போதும். வேறு யாருடைய உதவியும் எமக்கு தேவையில்லை...

பழமரங்களிடையே தீவனப்புற்கள் உற்பத்தி

தீவன மரங்களுடன் ஆடுகள் வளர்ப்பு மற்றும் பழத்தோட்டங்களுடன் வேளாண் காடுகள் போன்றவை மானாவாரி மற்றும் தரிசு நிலங்களுக்கு ஏற்ற முறைகளில் ஒருங்கிணைந்த பண்ணையம் ஆகும்.

மானாவாரி மற்றும் தரிசு நிலங்களில் கால்நடை வளர்ப்பு மிகுந்த பயனைத் தரும். அதிலும் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு, எருமை மாடு வளர்ப்பு போன்றவை மிகுந்த லாபத்தைத் தருகிறது. நமது நாட்டில் கால்நடை வளர்ப்பானது வீட்டிற்கு ஒன்று அல்லது சில எண்ணிக்கை என்ற நிலை மாறி கால்நடை பண்ணையத்தை ஒரு லாபம் தரும் தொழிலாக செய்யத் தொடங்கியுள்ளனர் என்பது பெருமைப்படக்கூடிய செய்தியாகும். இது மனிதர்களுக்குத் தேவைப்படும் விலங்கின் புரதத் தேவையைப்பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்தி, வாழ்க்கை முறை மேம்படவும் உதவுகின்றது. பெருகி வரும் மக்கள் தொகை, நவீனமயமாக்கல், தொழிற்சாலைகள், குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் ஆகியவற்றால் கிராமப்புறங்களில் உள்ள விளை நிலங்களும், இயற்கையான மேய்ச்சல் நிலங்களும் நாளுக்கு நாள் குறையத் தொடங்கியுள்ளது. இந்நிலை ஏற்கனவே நாட்டில் நிலவும் தீவனப்பற்றாக் குறையினை மேலும் அதிகரித்து உற்பத்தியைப் பாதிக்கிறது. நமது நாட்டில் ஆடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப உற்பத்தித் திறன் இல்லாததற்கு மிக முக்கிய காரணம் தீவனப்பற்றாக்குறையும் முறையான தீவன மேலாண்மையைப் பின்பற்றாததுமே முக்கிய காரணங்களாகும்.



**தானியப்பயிர்களுடன் ஆடு வளர்ப்பு**

ஊடுபயிர் முறையில் தீவன மரங்கள் வளர்ப்பு

மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் செம்மறி ஆடு வளர்ப்பு ஒரு சிறந்த லாபம் தரும் தொழிலாகும்.

இத்தகைய நிலங்களில் பயிர் வளர்ப்புடன் மரவகைத் தீவனப் பயிர்களாகிய சூபாபுல், கிளைரிசிடியா, கொடுக்காப்புளி, வேம்பு, வாகை, அகத்தி, சித்தகத்தி, ஆச்சான், உதியன், பூவரசு, கல்யாண முருங்கை போன்ற மர வகைகளைத் திட்டமிட்டு நட்டு வளர்க்கலாம். இவற்றின் இலை மற்றும் காய்களில் அதிக புரதச்சத்தும் தாது உப்புகளும் உள்ளது. மர இலைகளில் மற்ற தீவனங்களைக் காட்டிலும் சத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது இது மட்டுமின்றி மரவகைத் தீவனங்களைக் கொடுக்காமல் தானியவகை அல்லது புல்வகை தீவனப்பயிர்களுடன் கலந்து ஆடுகளுக்கு பசுந்தீவனமாக அளிப்பதன் மூலம் அடர்தீவன செலவைக் குறைத்து உற்பத்தி திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

### மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற சோளம்மற்றும்முயல்மசால்தீவனப்பயிர் உற்பத்தி

மானாவாரியில் தானிய உற்பத்திக்காக சோளம், கம்பு போன்ற பயிர்கள் வருடம் ஒரு முறை மட்டுமே சாகுபடி செய்கிறோம். இப்பயிர்கள் அறுவடை முடிவடைந்தவுடன் அக்குறிப்பிட்ட நிலம் கரம்பாகக் காணப்படுகிறது. இதற்கு பதிலாக சோளம் மற்றும் கம்பு போன்ற விவசாயப் பயிர்களுடன் ஏக்கருக்கு 5.5 கிலோ என்ற அளவில் முயல் மசால் விதைகளை மண்ணுடன் கலந்து நிலப்பரப்பில் தூவ வேண்டும். இதில் சோளப்பயிர் மிக விரைவாக வளரும், முயல் மசால் சற்று குறைவான வளர்ச்சியுடன் வளரும். இந்த நிலையில் தானியத்திற்கான சோளப்பயிரின் அறுவடை முடிந்த பின்னர் நேரடியான சூரிய ஒளி கிடைப்பதனால் முயல் மசால் நன்கு செழித்து வளரும். இப்பயிரை நன்கு முற்றவிட்டு அறுவடை செய்தால் கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம் வருடம் முழுவதும் கிடைப்பது மட்டும் அல்லாமல் அவற்றின் விதைகள் அந்நிலத்திலேயே விழுந்து அடுத்த வருட பருவ மழையில் நிலத்தை உழுது சோளப்பயிரை சாகுபடி செய்யும் போது முயல் மசால் விதையும் நன்கு முளைக்கத் துவங்கி வளர்ந்து பசுந்தீவனத்தைக் கொடுக்கும். இம்முறையில் ஒருமுறை விதைக்கப்பட்ட முயல் மசால் 2 அல்லது 3 வருடங்கள் வரை மீண்டும் முளைத்து வளர்ந்து சோளப்பயிர் இல்லாத நாட்களிலும் பசுந்தீவனத்தை அளிக்கும். அத்துடன் முயல் மசால் மூலம் மண்ணில் நிலை நிறுத்தப்பட்ட தழைச்சத்து சோளப்பயிரின் மகசூலை அதிகரிக்கும்.

### மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற மர ஊடுபயிர் முறை

மானாவாரி நிலங்களில் தீவன மர வகைகளை குறிப்பிட்ட இடைவெளியில் கிழக்கு மேற்காக நீளவாக்கில் நெருக்கமாக ஊடுபயிராக அமைத்து அம்மரங்களின் வரிசைகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் வேளாண்மை மேற்கொள்ளும் முறையே மர ஊடுபயிர் சாகுபடி முறையாகும்.

இது மட்டுமின்றி, மானாவாரி நிலங்களில் மண் அரிப்பினைத் தடுத்து, ஈரப்பதத்தைக் காக்கும் வகையில் உயிர் வரப்புகள் அமைக்கலாம். மேலும், நிலங்களை சுற்றி முள்கம்பி வேலி அமைப்பதற்குப் பதிலாக கால்நடை தீவனம் மற்றும் விறகு போன்றவற்றைத் தரவல்ல மரங்களை நட்டு உயிர் வேலி அமைக்கலாம்.

### மானாவாரியில் சப்போட்டா மற்றும் கொய்யாத் தோப்புகள் மற்றும் பசுந்தீவனம் அமைத்தல்

இம்முறையில் சப்போட்டா அல்லது கொய்யாத் தோப்பில் கோ-4 ரக புற்களையும், கொழுக்கட்டைப்புல்லையும் ஊடே இணைந்து தோட்டத்தின் வெளி சுற்றளவில் சூபாபுல் கிளைரிசிடியா மற்றும் அகத்தி போன்ற குறு மரங்களையும் பயரிட்டு தோட்டத்தின் உள்ளே புரதச்சத்து மிக்க கோழி மசால் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்ய இயலும். இதில் 6 முதல் 12 மாதம் வயதுடைய செம்மறியாடுகளை இணைத்து வளர்ப்பதன் மூலம் நாளொன்றுக்கு முறையே 53 கிராம் மற்றும் 44 கிராம் அளவில் உடல் வளர்ச்சியைப் பெற முடியும்.

மற்றொரு வகையான ஆய்வில், கினியா புல்லை கொய்யா அல்லது சப்போட்டாவுடன் இணைத்து பயிர் செய்வதன் மூலம் எக்டேருக்கு 48 டன் பசும் புல்லும் , புளியந்தோப்புகளில் தீவனக் கொள்ளுப் பயிரை இணைத்துப்பயிர் செய்வதன் மூலம் 5-8 டன் பசுந்தீவனமும் கிடைக்கும்.

இது போலவே, மானாவாரியில் மாமரத்துடன் நிலக்கடலை அல்லது தீவனக்கொள்ளு அல்லது தீவனச் சோளம் சாகுபடி செய்யப்பட்டதில் எக்டருக்கு 190, 207 மற்றும் 234 கிலோ அளவில் புரதச்சத்து கொண்ட பசுந்தீவனம் உற்பத்தி செய்ய இயலும் என்பதும் கண்டறியப் பட்டுள்ளது.

மானாவாரியில் மாமரத்துடன் காராமணி இணைத்து பயரிடுவதன் மூலம் எக்டருக்கு 170 கிலோ புரதச்சத்து கொண்ட 3.25 டன் காராமணி தீவனப்பயிராகப் பெற இயலும். இதன் மூலம் 10 முதல் 12 செம்மறியாடுகளை வருடம் முழுவதும் பராமரிக்கலாம்.

### மானாவாரியில் வேம்புடன் இணைத்து செம்மறியாடு வளர்ப்பு

மானாவாரியில் 5 மீட்டர் இடைவெளியில் நடப்பட்ட வேப்ப மரத் தோப்புகளின் ஊடே சோளம் தீவனப்பயிர் சாகுபடி செய்யப்பட்டு எக்டேருக்கு 4.2 டன் சோளத் தட்டைப் பெறலாம். இந்த சோளத்தட்டுடன் நாளொன்றுக்கு 150 கிராம் என்ற அளவில் கலப்புத்தீவனத்துடன் வேப்ப மர இலைகளை சேர்த்து தீவனம் அளிக்கப்பட்டு வளர்ப்பதின் மூலம் ஆடுகள் நாளொன்றிற்கு 45 கிராம் உடல் எடையில் வளர்ச்சியும், கிளைரிசிடியா இலைகளையும் கூடுதலாக சேர்த்து அளித்ததின் மூலம் 58 கிராம் வரையில் உடல் வளர்ச்சியையும் அடைந்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.

### மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற பழத்தோட்டங்களுடன் வேளாண் காடுகள் அமைத்தல்

மானாவாரி எனப்படும் தரிசு நிலப்பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த பண்ணையம் மேற்கொள்ள உதாரணமாக 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்தது 2 ஏக்கரில் தானியப்பயிர்கள் மற்றும் பழ மரங்களை வளர்க்கலாம். பழ மரங்களில் குறிப்பாக கொய்யா, மாதுளை, சப்போட்டா போன்றவைகளை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் உருவாக்கலாம்.

முல்லை மேய்ச்சல் வகையில் வேளாண் காடுகளை உருவாக்கி, ஆடுகளுக்கான தீவன மரங்களான சூபாபுல், கிளைரிசிடியா, கல்யாண முருங்கை ஆகியவற்றுடன் கொளுக்கட்டைப்புல், முயல் மசால் போன்ற புல்மற்றும்பயறுவகை பசுந்தீவனங்களையும் வளர்க்கலாம்.

இத்தகைய முல்லை மேய்ச்சல் நிலங்களில் நீர் பாய்ச்சுவதற்குத் தெளிப்பு நீர் பாசனத்தைப் பயன்படுத்தலாம். மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் மூலம் நடைமுறை செலவினமாக ரூபாய் ஒரு லட்சம் வரை செலவு செய்வதன் மூலம்குறைந்த்து இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபாய் இலாபமும் ஈட்ட இயலும். மானாவாரி பகுதிகளில் பண்ணைக் குட்டைகளை அமைத்து மீன் வளர்ப்பதன் மூலமும், முயல் வளர்ப்பதன் மூலமும் கூடுதலாக வருமானம் ஈட்ட முடியும்.





4ம் பக்கத் தொடர்ச்சி....

சிறுதானியங்கள் உடலில் இருக்கும் டிரை கிளிசரைட் எனும் ஒருவகை கொழுப்பின் அளவை குறைக்க செய்கிறது. மேலும் உடலில் ரத்த அணுக்களை தடிமனாக ஆக்குவதை தடுப்பதால் கரோனரி தமனி எனும் இருதய கோளாறுகள் உருவாவதை தடுக்கசெய்கிறது. சிறுதானியங்களில் இருக்கும் விட்டமின் பிகொழுப்பையும்கார்போஹைட்ரேட்டுகளையும் உடைக்க கூடியவை. இதனால் கொழுப்பு கட்டிகள் உடலில் சேர்வதில்லை. அதோடு நிறைவுற்ற கொழுப்புகள் இதில் இல்லை.

பொதுவாக தாவர உணவுகளை காட்டிலும் இறைச்சி வகைகளில் தான் அதிகம்புரதம்உள்ளது என்று சொல்வார்கள். ஆனால் சிறுதானியங்களில் அதிக அளவு புரதம் எளிதாக கிடைக்கிறது. கோதுமை போன்ற புரதக்கூட்டமைப்பு கொண்டிருந்தாலும் சிறு தானியங்களில் பசையம் போன்ற ஒட்டும் தன்மை பொருள் இல்லை என்பதால் இது செரிமானத்தை சீராக்கவும் செய்கிறது.

அரிசி உணவுகள் உடல் எடையை அதிகரிக்க கூடும் ஆனால் உடல் எடையை குறைக்க விரும்புவர்கள் சிறு தானியங்கள் மீது கவனம் செலுத்தலாம். இதில் டிரிப்டோபன் என்னும் அமினோ அமிலம் உள்ளது. இது பசியை கட்டுப்படுத்த கூடும். செரிமானத்தை பொறுமை ஆக்கும். நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இது பசி உணர்வை உண்டாக்காது. உடல் எடையை கட்டுக்குள் வைக்க விரும்பினால் நீங்கள் சிறுதானியத்தை தினசரி உணவில் சேர்க்கலாம்.





சிறுதானியங்களில் மக்னீசியம் உள்ளது. இது தமனியின் உட்சுவர்களை தளர்த்துவதால் உயர் ரத்த அழுத்தம் கட்டுக்குள் வைக்கப்படு கிறது. ஆஸ்துமா, மைக்ரேன் என்னும் ஒற்றைத்தலைவலியை கட்டுக்குள் வைக்கவும் செய்கிறது.

சிறுதானியங்கள் குறைந்த கிளைசெமிக் குறியீடு கொண்டவை. இது சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவு ஆகும். ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்காமல் நிலையாக வைத்திருக்க சிறுதானியம் உதவுகிறது. சிறுதானியங்கள் உடலில் இன்சுலின் உணர்திறனை அதிகரிக்க செய்கிறது. நீரிழிவு இருப்பவர்களுக்கு சர்க்கரை அளவை கட்டுக்குள் வைப்பது போன்று இதை அடிக்கடி சேர்ப்பதன் மூலம் நீரிழிவு வராமல் தடுக்கலாம்.

பித்தப்பை கற்கள் வராமல் இருக்க நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகள் உதவும். குடல்களில் உணவு வேகமாக செல்வதை நார்ச்சத்து உணவுகள் தவிர்க்கிறது. பித்த அமிலங்கள் சுரப்பை நார்ச்சத்து உணவுகள் கட்டுப்படுத்துகிறது. ஆய்வு ஒன்றில் கரையக்கூடிய மற்றும் கரையாத நார்ச்சத்து எடுத்துகொண்டவர்களுக்கு மற்றவர்களை காட்டிலும் 13% குறைவான கற்கள் உருவானது கண்டறியப்பட்டது.

சிறுதானியங்களில் இருக்கும் ட்ரிப்ரோபன் மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. தூக்கமின்மையால் அவதி படுபவர்கள் இரவு நேரத்தில் சிறுதானியங்கள் சேர்த்துகொள்வது பலன் அளிக்கும். சிறுதானியங்களில் மெக்னீசியம் அளவும் அதிகம் என்பதால் பெண்கள் இதை அடிக்கடி சேர்க்கும் போது மாதவிடாய் உபாதை குறையக்கூடும். சிறுதானியங்களில் பொஸ்பரஸ் சத்தும் அதிகம் உள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு கப் சிறுதானியம் பொஸ்பரஸ் தேவையின் 17% கொடுத்துவிடுகிறது.

சிறுதானியங்கள் புரதம் மிகுந்தவை என்பதால் இது தசைகளின் குறைபாட்டை தடுத்து தசைகள் வலுப்படவும் செய்கிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவாக சிறுதானியத்தை ஏன் மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள் என்பதை புரிந்துகொண்டீர்களா?

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2024இல் வெளியிடப்பெற்றது.